بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் 30.10.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பல்வேறு சம்பவங்கள் மற்றும் அறவுரைகளை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தமது பல சொற்பொழிவுகளில் எடுத்துரைத்துள்ளார்கள். இன்று அதனை நான் பல்வேறு இடங்களிலிருந்து தொகுத்து எடுத்துரைப்பேன். அந்த ஒவ்வொரு சம்பவமும் தத்தமது இடத்தில் படிப்பினைகளைக் கொண்டதாக உள்ளது. ஜமாஅத் உறுப்பினர்கள் தமது அறிவை அதிகரித்துக் கொள்ள வேண்டும். மார்க்க அறிவு படைத்தவர்களும் உலகின் அன்றாட நிகழ்வுகளையும் அறிந்து வைத்திருக்க வேண்டும். வரலாற்றையும் அறிந்திருத்தல் வேண்டும். குறிப்பாக எவர்கள் வசம் தப்லீக் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அவர்கள் அதாவது முபல்லிக் மற்றும் முரப்பியான்கள் இவ்விஷயங்களில் சிறப்பான கவனம் செலுத்த வேண்டும். இன்றைய உலகில் இந்த தகவல்கள் உடனடியாக மிக எளிதாக கிடைத்து விடுகின்றன. எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய விஷயம் ஒன்றை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எடுத்துரைக்கின்றார்கள். அது நமக்கு நமது அறிவாற்றலை அதிகரித்துக் கொள்வதன் பக்கமும் கவனமூட்டுகின்றது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒரு நபர் இருந்தார். அவர் மிகப்பெரிய ஞானி என்று அழைக்கப்பட்டார். ஒரு அரசரின் அமைச்சர் ஒருவர் தற்செயலாக அவரின் சீடராகிப் போனார். எந்த அளவுக்கு என்றால், அரசரிடம் சென்று நீங்கள் கண்டிப்பாக அந்த ஞானியைச் சந்திக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். அந்த நபர் உண்மையிலேயே ஞானியாக இருந்தாரா? இல்லையா? என்பது நமக்கு தெரியாது. ஆனால் அவர் நிச்சயமாக அறிவிலியாக இருந்தார் என்பதை சம்பவத்தின் தொடர்ச்சி நமக்கு உணர்த்துகின்றது. மன்னர் வரவிருக்கின்றார். அவரை சந்திப்பதற்கு மன்னர் வந்தவுடன், அவர், மன்னர் அவர்களே! நீங்கள் நீதியுடன் நடக்க வேண்டும் என மன்னரிடம் கூறினார்.

பாருங்கள்! முஸ்லிம்களில் அலெக்ஸாண்டர் எனும் மன்னர் ஒருவர் இருந்தார். அவர் மிகவும் நீதிமானாகத் திகழ்ந்தார். இன்று வரை அவருக்கு எவ்வளவு பேரும், புகழும் இருக்கின்றது என்று மன்னரிடம் கூறினார். உண்மையில் அலெக்ஸாண்டர் எனும் அரசர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு பலநூறு ஆண்டுகளுக்கு முன்னரே இன்னும் சொல்லப்போனால், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கும் முன்னர் தோன்றிய அரசர் ஆவார். ஆனால் ஞானி என்று அழைக்கப்பட்டவரோ, அவரை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னர் தோன்றியதாகக் கருதி அவரை முஸ்லிம் மன்னராக ஆக்கி விட்டார். அதன் பொருள் என்னவென்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இதன் விளைவு என்ன ஆனது? அவரால் அரசர் மீது என்ன தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க முடியும்? மாறாக, மன்னர் அவர் மீது கோபங்கொண்டு எழுந்து சென்று விட்டார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஞானியாக இருப்பதற்கு வரலாற்று அறிவு இருக்க வேண்டும் என்பது நிபந்தனை இல்லை தான். ஆனால் இந்த இழிநிலையை அந்த போலி ஞானி தமக்குத் தாமே தேடிக் கொண்டார். அந்த ஞானியின் தன்முனைப்பே அவரை இழிநிலைக்கு ஆளாக்கி விட்டது. மனிதன் உண்மையிலிருந்து விலகிச் சென்று பெயர் தாங்கிய தத்துவவாதியாக அல்லது அறிஞராக முயற்சி செய்தால் இதுபோன்ற இழிநிலையும், முடிவுமே ஏற்படும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

பொதுவாக பிறருக்கு எதிராக துஆ செய்வதில் மக்கள் மிகவும் அவசரம் காட்டுகின்றனர். நாம் எவருக்கு எதிராகவும் துஆ செய்யக் கூடாது.

ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் கூறினார்கள்:

நான் மாடியில் வசித்து வந்தேன். அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது வீட்டில் தனது அறைக்கு மேலே ஓர் அறையை மவ்லவி சாஹிபிற்காகக் கட்டியிருந்தார்கள். மவ்லவி சாஹிப் மேலே இருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வீட்டின் கீழ்ப்பகுதியில் இருந்தார்கள். ஒருநாள் இரவு கர்ப்பிணிப் பெண் பிரசவ வலியால் துடிப்பது போன்ற சப்தம் எனது அறையின் கீழ்த்தளத்திலிருந்து வந்தது. எனக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. நான் காது கொடுத்து சப்தத்தை உன்னிப்பாக கவனித்த போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் துஆ செய்து கொண்டிருந்தது எனக்கு தெரிய வந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள். இறைவா! பிளேக் நோய் பரவி வருகிறது. அதன் காரணமாக மக்கள் பலியாகி வருகின்றனர். இறைவா! இந்த மக்கள் அனைவரும் மரணித்து விட்டால் பின்னர் உன் மீது நம்பிக்கை கொள்ள எவர் இருப்பார்?

பாருங்கள்! பிளேக் நோய் என்பது ஒரு அடையாளமாகும். அதைப் பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முன்னறிவித்து இருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் முன்னறிவிப்புகளிலிருந்தும் பிளேக் நோய் பற்றிய அடையாளம் உள்ளது. ஆனால் எந்த நபரின் உண்மைத்துவத்தை வெளிப்படுத்த பிளேக் நோய் தோன்றியதோ, அதே நபர் பிளேக் நோய் பரவுவதைக் கண்டு அல்லாஹ்விடத்தில் மன்றாடுகின்றார்.

கூறுகிறார்கள்: இறைவா! இந்த மக்கள் அனைவரும் மரணித்து விட்டால் உன் மீது ஈமான் கொள்ள எவர் இருப்பார்? எனவே ஒரு நம்பிக்கையாளர் பாமர மக்களுக்கு எதிராக துஆ செய்யக் கூடாது. ஏனென்றால் அவர்களை பாதுகாக்கவே நம்பிக்கையாளர் இருக்கின்றார். ஒரு நம்பிக்கையாளர் உலகத்தை (அழிவிலிருந்து) பாதுகாக்கவே தோன்றியிருக்கின்றார். அவர் அவர்களுக்கு எதிராக துஆ செய்தால், அவர் யாரைப் பாதுகாப்பார்?

இஸ்லாத்தைப் பாதுகாக்கவே அஹ்மதிய்யத் தோன்றியுள்ளது. முஸ்லிம்களைப் பாதுகாக்கவே அஹ்மதிய்யத் தோன்றியுள்ளது. முஸ்லிம்களின் மேன்மையை பெற்றுத் தரவே அஹ்மதிய்யத் தோன்றியுள்ளது.

ஒரு ஃபார்ஸி கவிதையில் இவ்வாற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

எனது உள்ளமே! நீ இந்த மக்களின் எண்ணங்களையும், உணர்வுகளையும் கருத்தில் கொள்! அப்போது தான் அவர்களின் உள்ளம் கெட்டுப் போகாமல் இருக்கும். நீ பொறுமையிழந்து அவர்களுக்கு எதிராக துஆ செய்யத் தொடங்கி விடாதே!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தன்னைப் பற்றி கவிதையில் கூறுகின்றார்கள்:

இவர்களுக்கு உனது தூதர் (ஸல்) அவர்களின் மீது அன்பு உள்ளது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மீது கொண்ட அன்பின் காரணமாகவே உன்னை ஏசிப்பேசுகின்றனர்.

எனவே பொதுமக்கள் பாமரர்கள் ஆவர். மவ்லவிகள் அவர்களுக்கு என்ன கற்றுக் கொடுக்கின்றனரோ அதனை அவர்கள் வெளிப்படுத்துகின்றனர். இன்றும் பல அஹ்மதிகள் கடிதம் அனுப்புகின்றனர். அஹ்மதிய்யத்தின் உண்மைத்துவம் தெரிய வந்ததும், எதிரிகளில் பலரின் நிலை முற்றிலும் மாறி விடுகின்றது. எங்களுக்கு இப்போதுதான் உண்மை புரிய வந்தது. மவ்லவிகள் பொய் கூறினர் என்பது எங்களுக்கு தெரிந்து விட்டது என அஹ்மதியல்லாத பலர் எனக்கு கடிதம் எழுதுகின்றனர். இதுபோன்ற பல சம்பவங்கள் ஆப்பிரிக்காவில் நிகழ்ந்துள்ளன. எந்த ஊர்களில் புதிதாக ஜமாஅத் உருவாகின்றதோ அங்கு எங்களுக்கு மவ்லவிமார்கள் உங்களைப் பற்றி தவறாகக் கூறினர் என்று மக்கள் கூறுகின்றனர். எனவே, தீய ஆலிம்கள் மற்றும் மோசமான தலைவர்களிடமிருந்து முஸ்லிம் சமுதாயத்தை அல்லாஹ் பாதுகாக்க நாம் துஆ செய்ய வேண்டும். மேலும் பொதுமக்கள் உண்மையைக் கண்டு கொள்ளும் நற்பாக்கியம் பெற வேண்டும் என நாம் துஆ செய்ய வேண்டும்.

அடுத்து, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

உண்மையான நம்பிக்கையாளர்களுக்கு துன்பங்களும், கஷ்டங்களும், அபாயங்களும் நேரிடும்போது அல்லாஹ் அவர்களுக்கு நன்மைகளுக்கான ஏற்பாட்டைச் செய்து விடுகிறான். இது இறை நியதியாகும்.

ஹஸ்ரத் மவ்லானா ரூம் அவர்களின் கவிதை ஒன்று உள்ளது:

ஒரு சமுதாயத்தை இறைவன் எத்தகைய சோதனைகளுக்கு ஆளாக்குகின்றானோ அதன் கீழ் ஒரு பெரிய கருவூலம் ஒன்றை அவன் வைத்துள்ளான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அடிக்கடி இந்த ஃபார்ஸி கவிதையைப் படித்துக் காட்டி கூறுவார்கள்:

ஒரு சமுதாயம் அல்லது ஜமாஅத் உண்மையான பொருளில் முஸ்லிம்களாக மாறி விட்டால் அந்த சமுதாயம் என்ன சோதனை மற்றும் அபாயங்களால் சூழப்பட்டிருக்குமோ அது அவர்களுக்கு இரட்சிப்பு மற்றும் முன்னேற்றத்தின் காரணியாகி விடும். முடிவில் மகிழ்ச்சியைத் தராத எந்தவொரு துன்பமும் அவர்களுக்கு வராது. அதாவது அவர்களுக்கு நேரிடுகின்ற ஒவ்வொரு துன்பம் மற்றும் கஷ்டத்திற்கு பின்னரும் மகிழ்ச்சியும் வசதியும் ஏற்படும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சில நபர்களிடம் துஆக்கள் தொடர்பாக துஆவிற்குத் தொடர்பு அவசியம் என்று கூறி விடுவார்கள். நீங்கள் துஆவிற்கு கைமாறாக ஒன்றை செய்வதாக கூறுங்கள் நான் துஆ செய்கிறேன் எனக் கூறுவார்கள். தொடர்பை அதிகரிக்கவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த வழிமுறையை மேற்கொண்டு வந்தார்கள்.

அது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பலமுறை ஒரு சம்பவத்தைக் கூறியுள்ளார்கள்:

ஒருமுறை ஒரு இறை நேசரிடம் ஒரு நபர் துஆவிற்கு விண்ணப்பிற்கச் சென்றார். அந்த நபரின் வீட்டுப் பத்திரம் காணாமல் போயிருந்தது. இறை நேசர் கூறினார். நான் துஆ செய்வேன். முதலில் நீ எனக்கு அல்வா வாங்கி வா என்று கூறினார். அவர் அல்வா வாங்கிக் கொண்டு வந்தார். இறை நேசரிடம் காணாமல் போன வீட்டுப் பத்திரம் கிடைத்து விட்டது எனக் கூறினார். அந்த இறை நேசர் கூறினார்: துஆ செய்ய உனக்கு என்னுடன் ஒரு தொடர்பு ஏற்பட என்பதற்காகவே நான் உன்னை அல்வா வாங்கி வரும்படி கூறினேன். அதனால் வெளிப்படையான நன்மையும் உனக்கு கிடைத்து விட்டது என்று அவர் கூறினார். இதுபோன்ற பல சம்பவங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்க;ள மூலமாக நமக்கு கிடைக்கின்றன. ஒரு தூய நல்லடியாரின் வியாபாரம் வெற்றி பெற அல்லது அவரது உடல்நலத்திற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் வேதனையுடன் துஆ செய்தார்கள் என்றால், அந்த நபர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இஸ்லாத்தை பரப்புகின்ற பணியில் அசாதாரண பொருளுதவி செய்யக்கூடியவராக இருந்தார். எனவே அந்தப் பொருள் தியாகத்தின் காரணமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களோடு ஒரு சிறப்பான தொடர்பு அவர்களுக்கு ஏற்பட்டது.

நன்மைகளில் ஒருவர் மற்றவரை முந்திக் கொள்ள வேண்டும் என்று கவனமூட்டியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கூற்றை எடுத்துரைத்தார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இரண்டு சஹாபிகளைப் பற்றி கூறி வந்தார்கள். ஒருமுறை கடை வீதியில் ஒரு

சஹாபி ஒரு குதிரையை விற்பதற்காக கொண்டு வந்தார். ஒருவர் அவரிடம் விலையைக் கேட்டறிந்தார். அதற்கு அந்த சஹாபி இதன் விலை இவ்வளவு எனக் கூறினார். அதற்கு குதிரை வாங்க வந்த சஹாபி, இல்லை. குதிரையின் விலை இவ்வளவு எனக் கூறினார். அதாவது விற்க வந்த சஹாபி கூறிய தொகையை விட குதிரையை வாங்க வந்த சஹாபி கூறிய தொகை அதிகமாக இருந்தது.

அன்னார் கூறுகின்றார்கள்: இது சஹாபாக்களின் மிக சாதாரண சம்பவமாகும். அவர்களின் நேர்மை மற்றும் நம்பிக்கைக்கு இது ஒரு சிறிய உதாரணமாகும். சஹாபாக்கள் நன்மையின் அனைத்து மைதானங்களிலும் ஒருவர் மற்றவரை முந்துவதில் முனைப்பு காட்டினர். இத்தகைய எண்ணம் கொண்டவர்களாக நம்மில் ஒவ்வொருவரும் ஆகி விட்டால், பின்னர் இவ்விஷயங்கள் எங்கு நமது தர்பிய்யத்திலும், நற்கூலியை பெற்றுத் தருவதிலும் பயனளிக்குமோ அங்கு நமது சந்ததிகளின் நலனுக்கும் நன்மை பயப்பதாக அமையும். மேலும் அத்துடன் ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கும் அது காரணியாக அமைந்து விடும். எனவே நாம் நிலைநாட்ட வேண்டிய நம்பிக்கை நேர்மைக்கான தரம் இதுவே ஆகும். மற்றுமொரு முக்கிய விஷயம் உள்ளது. அதன் பக்கம் ஒவ்வொரு அஹ்மதியும் கவனம் செலுத்த வேண்டும். அதாவது எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்.

எல்லா சிறப்புகளின் அரசன் அல்லாஹ்வே ஆவான். அதேபோன்று ஒருவருக்கு நேர்வழி வழங்குவதும் இறைவனின் பணியே ஆகும். அல்லாஹ் பரப்புகின்ற பணியை மட்டுமே நம் வசம் ஒப்படைத்துள்ளான். ஆனால் நேர்வழி கொடுப்பது அல்லாஹ்வின் வேலையாகும். முடிந்தவரை தனது முழு ஆற்றல்களையும் பயன்படுத்தி முயற்சி செய்ய வேண்டும். விளைவுகளை அல்லாஹ் தானே ஏற்படுத்தி விடுவான். இன்ன நபர் நேர்வழி பெற்று அஹ்மதி ஆகி விட்டால் ஜமாஅத் முன்னேற்றம் அடைந்து விடும் என்று ஒருபோதும் எண்ணக் கூடாது. நம்முடைய கவனம் எப்போதும் அல்லாஹ்வின் அருளைப் பெறுவதன் பக்கமே இருக்க வேண்டும். நாம் எப்போதும் அல்லாஹ்வையே சார்ந்து நிற்க வேண்டும். நம்மால் என்ன செய்ய முடியுமோ அதனை செய்து விட வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு மனித இனத்தை வழிகேட்டிலிருந்து பாதுகாக்க எந்த அளவுக்கு வேதனை இருந்தது என்பதற்கு ஓர் உதாரணம் கொடுத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு சம்பவத்தைக் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் ஒரு எழுதப் படிக்கத் தெரியாத ஏழைப் பெண்மணி வந்தார். ஹுஸூர்! எனது மகன் கிறிஸ்தவனாகி விட்டான். அவன் முஸ்லிமாக நீங்கள் துஆ செய்யுங்கள் என அந்தப் பெண்மணி கூறினார். அவனை என்னிடம் அனுப்பி வையுங்கள். அவன் இறை விஷயங்களை செவிமடுக்கட்டும் என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். அந்தப் பையன் நோயாளியாக இருந்தான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடத்தில் அந்தப் பையன் வரும்போது அவனுக்கு அறிவுரை செய்து வந்தார்கள். இஸ்லாத்தின் விஷயங்களை அவனுக்கு புரிய வைத்து வந்தார்கள்.

அவன் முஸ்லிமாக ஆகி விட வேண்டும். அதன் பின்னர் அவனுக்கு ஏற்பட்டுள்ள நோயால் அவன் இறந்து போனாலும் கவலையில்லை. அதனால் எனக்கு எந்த துக்கமும் ஏற்படாது என அந்தப் பெண்மணி கூறினார். இறைவன் அந்த பெண்ணின் வேண்டுதலை ஏற்றுக் கொண்டான். அந்தப் பையன் முஸ்லிமாக மாறினான். இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட சில நாட்களுக்குப் பிறகு அந்த பையன் பாவம் இறந்து போனான். தனது மகனை மார்க்கத்திற்கு திரும்ப அழைத்து வர ஒரு மனித வழிமுறை உள்ளதென்றால் அது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களே என்பதை அந்த பெண் அறிந்திருந்தார். மேலும் இஸ்லாத்தின் மீது உண்மையான அனுதாபம் அவர்களுக்கே இருந்தது. அவர்களால் தான் உண்மையான வேதனையுடன் பிறருக்கு தப்லீக் செய்ய முடியும். தூதுச் செய்தியைக் கூற முடியும். பிறரை ஏற்றுக் கொள்ளச் செய்யவும் முடியும் என்பதை அந்தப் பெண் நன்கு அறிந்திருந்தார்.

ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்னி சீர்திருத்த வழிமுறையைப் பற்றி கூறியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சீர்திருத்தத்திற்கான அணுகுமுறை மிகவும் நுட்பமானதும் ஆச்சரியானதுமாக இருந்தது. ஒரு நபர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடத்தில் வந்தார். அவர் வசதி குறைவானவராக இருந்தார். அவர் பேசும்போது இடையிடையே வசதி குறைவின் காரணமாக நான் இரயிலில் தவறான வகையில் பயணம் செய்து வந்தேன் எனக் கூறினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அந்த நபரிடம் ஒரு ரூபாய் கொடுத்து, நீ திரும்பிச் செல்லும் போது அதுபோன்ற தவறைச் செய்ய மாட்டாய் என நான் நம்புகிறேன் என புன்னகை செய்தவாறு கூறினார்கள். அக்காலத்தில் ஒரு ரூபாய் என்பது மிகவும் மதிக்கத்தக்கது. எது ஆகுமானதோ அதனையே எப்போதும் செய்தல் வேண்டும் என அவருக்கு புரியவும் வைத்து விட்டார்கள்.

அடுத்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு தொழில் பயில்வது மற்றும் கடின உழைப்பின் பக்கம் மிகவும் கவனமூட்டியுள்ளார்கள்.

மிகக் குறைவான புரியும் தன்மை கொண்ட இளைஞர் ஒருவர் இருந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் ஃபஜ்ஜா என்ற இளைஞன் இருந்தான். அவனுக்கு இருந்த குறைமதிக்கு உதாரணமாக ஒரு சம்பவத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒருமுறை சில விருந்தினர் வந்தனர். அப்போது லங்கர் கான என்ற விருந்தினர் இல்லம் தனியாக இல்லை. ஆரம்பகால சம்பவமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வீட்டிலிருந்தே விருந்தினர்களுக்கு உணவு சென்றது. மஸீஹ் மவ்வூது

(அலை) அவர்கள் அந்த விருந்தினர்களுக்காக தேனீர் ஏற்பாடு செய்தார்கள். பின்னர் ஃபஜ்ஜாவிடம் கூறினார்கள். விருந்தினர்களுக்கு தேனீர் கொடுத்து விட்டு வாருங்கள். அவர் யாருக்கும் தேனீர் கொடுக்க மறந்து விடக் கூடாதே என்று எண்ணி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவனிடம் 5 பேர் பெயரையும் கூறி தேநீர் கொடுத்து விட்டு வர வேண்டும். எவருக்கும் தேனீர் கொடுக்க மறந்து விடக் கூடாது எனவும் கூறினார்கள். அவனுடன் சிராக் என்ற பழைய வேலைக்காரர் ஒருவர் இருந்தார். அவரையும் அனுப்பி வைத்தார்கள். ஆக, அவர் இந்த சிறிய விஷயத்தைக் கூட புரிய முடியாதவராக இருந்தார் என ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். ஆனால் பின்னர் குறுகிய நாட்களிலேயே கட்டட நிபுணராகி விட்டார். சிலர் வேலைக்கு எதுவும் செல்லாமல் வீணாக வீட்டில் இருப்பர். ஏழை நாடுகளிலும் அப்படி பலர் உள்ளனர். இங்கும் கூட சிலர் வேலை வெட்டியின்றி அமர்ந்து விடுகின்றனர். அத்தகைய மக்கள் சிறிது கவனம் செலுத்தினாலும் ஏதாவது ஒரு தொழிலைக் கற்று விடலாம்.

இறை விவகாரத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்க இருந்த தன்மானம் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒருவர் இருந்தார். அவர் பிற்காலத்தில் விசுவாசமிக்க அஹ்மதியாகி விட்டார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் நல்ல தொடர்பு இருந்தது. ஆனால் அவர் அஹ்மதி ஆவதற்கு முன்பு ஹஸ்ரத் சாஹிப் 20 ஆண்டுகள் வரை அவரிடம் பேசாமல் இருந்தார்கள். அவருடைய ஒரு செயல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு மிகவும் வெறுப்பை உண்டாக்கியது. அதாவது அந்த நபரின் ஒரு மகன் இறந்து போனான். ஹஸ்ரத் சாஹிப் துக்கம் விசாரிக்க அவர் வீட்டிற்குச் சென்றார்கள். அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் வந்த நபரை கட்டி அணைத்து இறைவன் என் மீது பெரும் அநீதியிழைத்து விட்டான் என்று கூறினார். அதைக் கேட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எந்த அளவுக்கு அவர் மீது வெறுப்பு ஏற்பட்டது என்றால், அவர் முகத்தைக் கூட ஹஸ்ரத் சாஹிப் பார்க்க விரும்பவில்லை. பிற்காலத்தில் அல்லாஹ் அவருக்கு பாக்கியம் வழங்கினான். அவர் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்ஹாக் சாஹிபுடன் ஒரு நாத்திகவாதி ஒருவர் படித்து வந்தார். ஒருமுறை நில நடுக்கம் வந்தபோது அவர் ராம் ராம் என்று கூறினார். மீர் சாஹிப் அவர்களோ அவரிடம் நீர் தான் கடவுளை மறுப்பவர் ஆயிற்றே. அவ்வாறிருக்க நீர் ராம் ராம் என்று ஏன் கூறினீர் எனக் கேட்டார்கள். அவர், தவறு ஏற்பட்டு விட்டது. ஏதோ சொல்லி விட்டேன் எனக் கூறினார். ஆக, அனைத்து சமூகத்திலும் இறை சிந்தனை காணப்படுவது இறை இருப்பிற்கான மிகப்பெரிய ஆதாரமாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடனான இறைவனின் உதவி மற்றும் ஒத்தாசைகளுக்கான சந்தர்ப்பத்தின் போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உள்ளத்தின் நிலையை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதி வைத்திருந்த Private Notebook –ன் வாசகத்திலிருந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உள்ளத்தின் நிலையை அனுமானிக்க முடியும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல்லாஹ்வை நோக்கி கூறுகின்றார்கள்:

இறைவா! எனது அனைத்து நண்பர்களும் நலம் விரும்பிகளும் எந்த உதவியும் செய்ய முடியாத போது நீ எனக்கு ஆறுதல் அளிக்கின்றாய்; உதவி செய்கின்றாய். அவ்வாறிருக்க நான் உன்னை எவ்வாறு விட்டு விடுவேன்?

ஒவ்வொரு அஹ்மதியின் நல்லொழுக்கத்தின் தரம் மிக உயர்வானதாக இருக்க வேண்டும். இது தொடர்பாக பலமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அறிவுரை செய்துள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நடைமுறை எவ்வாறிருந்தது? எதிரிகளுடன் அன்னார் எவ்வாறு நடந்து கொண்டார்கள். அதுபற்றி கூறியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்:

ஒரு நண்பர் கூறினார். இந்து மதத்தைச் சார்ந்த கடும் எதிரிகளில் ஒருவரின் மனைவி மிகவும் நோய்வாய்ப்பட்டார். மருத்துவர் அவருக்கு கூறிய மருந்துகளில் கஸ்தூரியும் ஒரு மருந்தாகும். அவருக்கு வேறெங்கும் கஸ்தூரி கிடைக்கவில்லை. இறுதியில் வெட்கப்பட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் வந்தார். தங்களிடம் கஸ்தூரி இருந்தால் தயவுகூர்ந்து எனக்கு சிறிது கொடுங்கள் என வேண்டினார். அவருக்கு மிகக் குறைந்த அளவே தேவைப்பட்டது. ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு கண்ணாடிக் குப்பி நிறைய கஸ்தூரி கொண்டு வந்தார்கள். உங்கள் மனைவிக்கு மிகக் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே இவை அனைத்தையும் கொண்டு செல்லுங்கள் எனக் கூறினார்கள் என அந்த எதிரியே தமது வாயால் கூறுகிறார்.

கோபமூட்டப்படுவதிலிருந்து தவிர்ந்து கொள்வது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்:

'தாவூன்' என்ற சொல் 'தஊன்' என்ற சொல்லிலிருந்து உருவானது. 'தஊன்' என்பதன் பொருள் ஈட்டியைக் கொண்டு குத்துதல் ஆகும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறி வந்தார்கள்.

எந்த இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் அன்னாரின் எதிரிகளுக்கு தனது கடுமையான தோற்றத்தை வெளிப்படுத்தினானோ, அதே இறைவன் இப்போதும் உயிருடன் இருக்கின்றான். அவன் நிச்சயமாக தனது

வலிமையின் தோற்றத்தை வெளிப்படுத்துவான். அவன் மௌனமாக இருக்க மாட்டான். ஆனால் நாம் அமைதியாக இருப்போம். உங்களது உள்ளத்தை உங்களின் கட்டுப்பாட்டில் வையுங்கள். மேலும் கடும் கோபமூட்டும் வார்த்தைகளைக் கேட்ட பிறகும் கண்ட பின்பும் அமைதியை விரும்பும் ஒரு ஜமாஅத் உலகில் இருக்கின்றது என்பதை உலகிற்கு காண்பித்துக் கொடுங்கள் என நாம் ஜமாஅத்திற்கு அறிவுரை செய்கின்றோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்த அளவுக்கு வேதனையுடன் துஆ செய்தார்கள் என ஏற்கனவே நான் கூறி விட்டேன். அதில் ஒன்று எவருக்கு எதிராகவும் துஆ செய்தல் கூடாது. இரண்டாவது எல்லா குழப்பமான விஷயங்களிலிருந்தும் விலகி, நாம் அமைதியை விரும்பக்கூடியவராகத் திகழ வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பலமுறை கூறி வந்துள்ளார்கள். அதாவது துஆ செய்கின்ற நேரத்தில் உண்மையான உருக்கம் அவருக்கு ஏற்படவில்லையென்றால், அவர் பாசாங்கு செய்து அழுவதற்கு முயற்சி செய்யட்டும். அதன் விளைவில் உண்மையாகவே உருக்கம் அவருக்கு ஏற்பட்டு விடும்.

அடுத்து, துஆவில் எப்படிப்பட்ட நிலையை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்று மேலும் விவரித்தவாறு அன்னார் கூறுகின்றார்கள்: நமது சில விஷயங்களில் நமக்கு தோல்வியும், மேலும் எதிரிகள் சில இடங்களில் நன்மை சூழ்ந்திருப்பதற்கும் காரணம் நம்மில் ஒரு பகுதியினர் துஆவில் சோம்பேறிகளாக உள்ளனர்.

இன்றும் இது உண்மையாகும். இவ்வாறு பலர் உள்ளனர். அவர்களுக்கு துஆ கேட்பதற்குக் கூட தெரியாது. அவர்களுக்கு துஆ என்றால் என்ன? என்று கூட தெரிவதில்லை. நாம் புரட்சி, புரட்சி என்றெல்லாம் பேசுகின்றோம். ஆனால் இவ்வகையில் பெரிய அளவில் பலவீனம் உள்ளது.

இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

துஆ என்பது மரணத்தை ஒப்புக் கொள்வதன் பெயராகும். ஒரு ஃபார்ஸி கவிதை உள்ளது. ஒருவர் தன் மீது ஒரு வகையான மரணத்தை ஏற்படுத்திக் கொள்ளாத வரை ஒருவரிடம் சென்று யாசிக்க முடியாது. ஆக, துஆ கேட்பது என்பதன் பொருள் மனிதன் தன் மீது ஒரு வகையான மரணத்தை ஏற்படுத்திக் கொள்கிறான் என்பதாகும்.

எவர் தம்மை இறைவனின் பார்வையில் மரணித்தவராகக் கருதுவாரோ அவரே இறைவனிடத்தில் துஆ கேட்பார். மேலும் இறை சன்னிதானத்தில் தன்னை ஒன்றுக்கும் உதவாதவராக ஆக்கிக் கொள்ள வேண்டும். நல்லொழுக்கங்களிலும், இறைவணக்கங்களிலும் மிக உயர் தரத்தை நாம் நம்மில் உருவாக்கிக் கொள்ளும் வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக! மேலும் ஒப்புக் கொள்ளப்படும் துஆக்களைச் செய்யும் நற்பாக்கியத்தை இறைவன் நமக்கு வழங்குவானாக! மேலும் அதற்குரிய உரிமைகளை நிறைவேற்றுபவர்களாக நாம் திகழ்வோமாக! ஆமீன்.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 30.10.2015
Tamil Translation : Moulavi. Abdur Rahman Tahir Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516